# கழுகின் சத்தம்

## நவம்பர் 28, 2023

2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிருக்க வேண்டுமென்றிருந்தால், அப்பொழுது உங்களுடைய நேரத்தை, உங்களுடைய திறமையை மற்றும் உங்களுடைய எல்லாக் காரியத்தையும், நீங்கள் கிறிஸ்துவுக்கென்று பெற்றுள்ள ஒவ்வொரு காரியத்தையும் முன்னிலைப்படுத்தி செயலாற்றுங்கள்.

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 57-0821 — எபிரெயர், முதலாம் அதிகாரம்

6 நான் கூட்டங்களுக்கு சென்றடைய வேண்டிய ஒரு ஸ்தலத்தினை அடையும் போது…நான் ஒரு கூட்டத்திற்கு செல்லப் போவதும், ஒரு கூட்டத்திற்கு அழைக்கப் பட போவதையுங் குறித்து எனக்கு ஒன்றுமே தெரியாது, ஏனென்றால் நான் ஒரு குறிப்பிட்டக் காரியத்தைச் செய்யும் படி வழிநடத்தப்படுவதை உணரும் வரையில் நான் எந்த ஒரு காரியத்தையும் தீர்மானிக்கிறதில்லை. ஒருகால் காலைக்கு முன்பே, கலிபோர்னியாவிற்கோ, மெயின் என்ற இடத்திற்கோ அல்லது எங்காவது, அவர் என்னை எங்கே அழைக்கிறாரோ, அங்கு நான் ஆகாய விமானத்தில் பறந்து செல்லலாம். அந்தக் காரணத்தினால்தான்

நான் பெரிய, நீண்ட பயணத் திட்ட விவரங்களை முன்னேற்பாடு செய்கிற தில்லை, ஏனென்றால் என்னால் அதைச் செய்ய முடியாது. என்னுடைய ஊழியம் அந்தவிதமாக இயல்பாக அமைவதில்லை, அதுவோ சற்று வித்தியாசமானதாயிருக் கிறது.

7 இப்பொழுது நான் சிறிது ஓய்வெடுப்பதற்காகவே இங்கே வீட்டிற்கு வந்துள்ளேன். நான் கடந்த கூட்டத்தில் இருபது பவுண்டுகள் எடை குறைந்து விட்டேன். சகோதரன் மெர்சியரும், சகோதரன் கோட் அவர்களும் சற்று முன்னர், “சகோதரன் பிரான்ஹாம், நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை நாங்கள் கவனித்தோம். நீங்கள் உங்களுடைய முழு இருதயத்தோடு இதற்குள்ளாக செயல்படு கிறீர்கள்” என்றனர்.

8 அதற்கு நான், "உங்களுடைய முழு பெலனையும், உங்களுடைய முழு ஆத்துமாவையும், உங்களுடைய முழு இருதயத்தையும், உங்களுடைய முழு சிந்தையையும், நீங்கள் பெற்றுள்ள ஒவ்வொரு காரியத்தையும், நீங்கள் பெற்றுள்ள எல்லாக் காரியத்தையும் கிறிஸ்துவுக்காக முன்னிலைப்படுத்தி செயல்படுத்துவதே நீங்கள் கர்த்தருக்காக சரியான விதமான ஒரு பணியைச் செய்ய முடிந்த ஒரே வழியாகும்" என்று கூறினேன்.

**எந்தக் காரியத்தையாவது நீங்கள் செய்து கொண்டிருக்கும்போது, அதைச் சரியாகச் செய்யுங்கள் இல்லையென்றால் அதைச் செய்யவே செய்யாதீர்கள், பாருங்கள், அதனை அப்படியே விட்டு விடுங்கள்.**

**நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிருக்க வேண்டுமென்றிருந்தால், அப்பொழுது உங்களுடைய நேரத்தை, உங்களுடைய**

**திறமையை மற்றும் உங்களுடைய எல்லாக் காரியத்தையும், நீங்கள் கிறிஸ்துவுக்கென்று பெற்றுள்ள ஒவ்வொரு காரியத்தையும் முன்னிலைப்படுத்தி செயலாற்றுங்கள்.**

9 நான் சற்று முன்னர் இந்த வாலிப நபரைக் கவனித்தேன். சகோதரன் பர்ண்ஸ் (Burns), அது உங்களுடைய மனைவி, அப்படித்தானே, அந்த வாலிபத் தம்பதியினர் இசைக் கருவியை வாசித்துக் கொண்டும், பாடிக்கொண்டுமிருந்தனர். ஆனால் அது ஒரு கின்னரப் பெட்டியாயிருக்கவில்லை, மேலும் அது ஒரு இசைப் பேழையாயுமிருக்கவில்லை. ஆனால் அது ஒருவிதமான கருவியாய், அவர்கள் நரம்பிசைக் கருவியினை எடுத்து கர்த்தருக்காக வாசிக்கிறார்கள். உங்களால் அப்படி இசைத்துப் பாட முடிந்தால், அது ஆத்துமாக்களை ஆயத்தம்பண்ணும்.

கவலைப்படாமல் ஏதோ ஒரு காரியத்தைச் செய்யுங்கள். உங்களால்—உங்களால் சீட்டியடிக்க முடிந்தால், நல்லது, சீட்டியடியுங்கள். ஏதோ ஒரு காரியத்தைச் செய்யுங்கள்.

தேவனுடைய இராஜ்ஜியத்திற்காக சாட்சி பகருங்கள் அல்லது ஏதோ ஒன்றைச் செய்யுங்கள்.

நீங்கள் என்னவெல்லாம் பெற்றுள்ளீர்களோ அவைகளைத் தேவனுடையப் பணியில் உபயோகப்படுத்த அதனை முன்னிலைப் படுத்துங்கள்.

57–0821 — எபிரெயர், முதலாம் அதிகாரம்

உங்களுக்குள் இருக்கும் காரியம்
என்னவென்று மனுஷரால்
அறியப்படுமேயன்றி நீங்கள் என்ன
அதிகமாய் பேசுகிறீர்களென்பதல்ல.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: செல்வாக்கு, மார்ச் 15, 1964

17. இதினின்று செல்வாக்கு என்னும் பொருளைக் குறித்து பேச விரும்புகிறேன். ஒருவேளை நீங்கள் இதைக் குறித்து, விசுவாசிக்காமலிருக்கலாம். ஆனால் நாம் கவர்கிறவர்களாயிருக்கிறோம்.

18. நான் அநேக சமயங்களில் அடக்க ஆராதனைகளில் பிரசங்கிப்பதுண்டு. அச்சமயங்களில் இறந்து போனவரைக் குறித்து அதிகமாக நான் கூற முயற்சிப் பதில்லை. மேலும் அவ்விதம் செய்ய அதற்கு அவசியமேதும் இல்லை. **ஏனெனில் இறந்து போன மனுஷனோ அல்லது மனுஷியோ யாராயிருந்தாலும் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையானது மனுஷருக்கு முன்பாக, நான் கூறுவதைக் காட்டிலும் அதிக சத்தமாக பேசுகிறதாயிருக்கிறது.**

மனுஷர்களுடைய அபிப்பிராயத்தை நான் ஒருபோதும் மாற்ற முடியாது. அன்னாருடைய வாழ்க்கையே அவர் யாரென்பதற்கு சாட்சியாயிருக்கிறது.

19. நாம் செய்கின்ற காரியங்கள் மற்றவர்களிடமாக என்ன செல்வாக்கை (கவர்ச்சி) உண்டாக்குகின்றது என்பதை நாமறிய மாட்டோம்.

**"சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள் தானே" (I கொரி 3:2) என்று வேதாகமம் உரைக்கின்றது. அதாவது பொது ஜனத்திற்கு முன்பாக உங்கள் வாழ்க்கையானது அதிக சத்தமாக வாசிக்கப்படுகின்றது.**

***உங்கள் சாட்சி உங்கள் வாழ்க்கைக்கு எதிர்மறையாயிருக்குமானால் அதினால் பிரயோஜனம் ஒன்றுமிராது.***

**உங்களுக்குள் இருக்கும் காரியம் என்னவென்று மனுஷரால் அறியப்படுமேயன்றி நீங்கள் என்ன அதிகமாய் பேசுகிறீர்களென்பதல்ல.**

**நீங்கள் ஒருவரிடம் ஒரு காரியத்தைக் குறித்துப் பேசி, "இது அதுதான், அது அவ்வாறு தான்" என்று கூறலாம். ஆனால், உங்கள் வாழ்க்கை நீங்கள் பேசுவதற்கு எதிர்மாறாக இருக்குமேயானால், நீங்கள் அதன் மூலம் வெளிக்காட்டும் சாட்சியானது மற்றவர் உங்களைக் குறித்து பேசுவதைக் காட்டிலும் அதிக சப்தமாக பேசுகிறதாயிருக்கின்றது. ஆம், அது உண்மை.**

**ஆகவே ஒவ்வொரு நாளும், நாம் வாழ்கின்ற வாழ்க்கையானது ஒரு செல்வாக்கை (கவர்ச்சியை) கொணர்ந்து நமக்குள் என்ன இருக்கிறதென்பதை அது நிரூபித்து காட்டுவதாயுள்ளது.** அதை நீங்கள் மாற்ற இயலாது.

**ஏனெனில் ஒவ்வொரு மனிதனும் தனக்குள்ளிருப்பதை பிரதிபலிக்கின்றவனாயிருக்கிறான் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.**

20. மேலும், கிறிஸ்தவர்களாயிருக்கும் சாட்சியைக் குறித்தோவென்றால், ஒரு மனிதனோ, மனுஷியோ, வாலிபனோ, அல்லது வாலிப ஸ்திரீயோ அடைந்துக் கொள்ளக் கூடிய மிக பயபக்தியான ஒரு காரியமாகும்.

**ஒரு மனிதன் கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக் கொள்வானென்றால், அவன் கிறிஸ்துவுக்கு பிரதிநிதியாகும் ஸ்தானம் வகிக்கப் போகிறான். ஆகவே அத்தகைய மனிதன் அவன் அசையப்போகும் ஒவ்வொரு அசைவையும் குறித்து கவனமுள்ளவனாயிருக்க வேண்டும்.**

ஏனெனில் தேவன் அவனுக்குள் என்ன செய்திருக்கிறார் என்பதை அவனின் உள்புற மானது பிரதிபலிப்பதை யாராகிலும் ஒருவர் கண்காணித்துக் கொண்டிருப்பார்.





நோவாவின் நாட்களில் அந்த சந்ததியிலிருந்து எத்தனை பேர் காப்பாற்றப்பட்டனர்? பல லட்சக்கணக்கானோரில் எட்டுப்பேர். எனவே அவர், “மனுஷ குமாரனுடைய வருகையிலும் அப்படியே நடக்கும்” என்றார்.

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: வாசல் இடுக்கமாய் உள்ளது, 59-03-01M

82. சபையைச் சேர்ந்திருந்த ஒவ்வொரு வருமே இரட்சிக்கப்படுவர் என்றே அவர் கள் எண்ணிக்கொண்டனர். ஆனால் இயேசுவோ, "வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதை கண்டு பிடிக்கிறவர்கள் சிலர்'' என்றார்.

83. சபையே இந்த காலையில் நான் உங்களை எச்சரிக்கட்டும். ஜாக்கிரதையா யிருங்கள். இன்றைக்கு அது நம்முடைய சுயநீதிக்கே, நாம் ஜீவித்துக் கொண் டிருக்கிற மாய்மால சந்ததியின் சுய திருப்திக்கே நேரத்தை எடுத்துக் கொள் கிறது. அந்த நேரத்தின் போது புருஷர் களும், ஸ்திரீகளும் சபைகளில் நின்று,

சாய்மான இருக்கைகளில் இருந்து கொண்டு, தேவனுடைய துதிப்பாடல் களைப் பாடிவிட்டு, பின்னர் அந்த சபையிலிருந்து நடந்து வெளியே சென்று, சிகரெட்டுகளை புகைத்து, மதுபானம் குடித்து, கீழ்த்தரமான கேலிப் பேச்சுக் களைப் பேசி, தங்களை 'கிறிஸ்தவர்கள்' என்று அழைத்துக் கொள்கிறார்கள். புருஷர் களும், ஸ்திரீகளும் பிரசங்க பீடத்திலிருந்து நடந்து சென்று அல்லது சபையிலிருந்து, உயிர்த்தெழுதலின் வல்லமையுள்ள இடத்திலிருந்து செல்லும்போது, அங்கே அந்த மாறாத மேசியாவினுடைய அடை யாளம் அவர்களுக்கு மத்தியில் அசை வாடிக்கொண்டிருக்கையில், கிறிஸ்துவுக் குள் ஒரு புதிய சிருஷ்டியாய் இருக்க வில்லையென்றால், ஏதோ காரியம் தவறாய் இருக்கிறது. தேவன் அதை அனுப்புகிறபோது, செய்தித்தாள்கள் அதை

ஒரு கரையிலிருந்து மறுகரைக்கு முன்னும் பின்னுமாக தீவிரமாக வெளியிடும் போதும், உறைபனி படர்ந்த வடக்குப் பகுதிகளிலிருந்து தென் மண்டல வெப்ப மிகுந்த காடுகள் வரைக்கும் அதை தீவிரமாய் வெளியிடும்போதும், ஜனங்கள் ஓயாது அதன் பேரில் தங்களுடைய புறமுதுகையே காட்டுகின்றனர். அப்பொ ழுது நாம் என்ன கூறமுடியும்? நாம் என்ன செய்ய முடியும்? எனவே நாம், "வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக் கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்'' என்று அவர் கூறின வேதவாக்கி யங்களுக்கே திரும்பிச் செல்கிறோம்.

84. அவர், “நோவாவின் நாட்களில் நடந்ததுபோல, மனுஷகுமாரன் வரும் நாட் களிலும் நடக்கும்” என்றார். கவனியுங்கள், நோவாவின் நாட்களில் உலகமானது கிட்டத்தட்ட இன்றைக்கு உள்ளது

போன்றே மக்கட்தொகையை கொண்டிருந்தது. அவர்களுடைய விஞ்ஞானம் நம்முடையதை மிஞ்சுகிறதாய் இருந்து கொண்டிருந்தது. அவர்கள் சிறகுடைய பெண்முக சிங்க உருவச்சிலைகளையும், கூர்நுனி கோபுரங்களையும் கட்டினர். இன்றைக்கு நாம் செய்ய முடியாத காரியங்கள் செய்யப்பட்டன. மேம்பட்ட, மகத்தான, அறிவாற்றலுள்ள ஜனங்களாய் இருந்தனர். நினைவிருக்கட்டும், இன் றைக்கு விஞ்ஞானம், "நள்ளிரவிற்கு ஒரு நிமிடமே உள்ளது'' என்று கூறுகிறது. மரண வேளைக்கான மணி அடிப்பதற்கு ஒரு நிமிடமே உள்ளது. அது நாம் நினைக் கிறதைக் காட்டிலும் காலதாமதமாய் உள்ளது. பரிசுத்த ஆவியானவர் இதை ஒவ்வொரு விசுவாசியினுடைய இருதயத் திற்குள்ளும் ஆழமாக பதியச் செய்வார்

என்று நான் நம்புகிறேன். “நோவாவின் நாட்களைப் போலவே!”

85. நோவாவின் நாட்களில் அந்த சந்ததியிலிருந்து எத்தனை பேர் காப்பாற்றப்பட்டனர்? பல லட்சக்கணக்கானோரில் எட்டுப்பேர். எனவே அவர், “மனுஷ குமாரனுடைய வருகையிலும் அப்படியே நடக்கும்" என்றார்.

86. "சோதோமின் நாட்களில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷ குமாரனுடைய வருகையிலும் நடக்கும்.". லட்சக்கணக்கானோரில் மூன்றே பேர் காப்பாற்றப்பட்டனர்.

87. அப்படியானால் நீங்கள், “பிரசங்கியாரே, அவரோடு கூட வரப்போகின்ற ஆயிரக்கணக்கானவர்களைக் குறித்து என்ன?'' என்று என்னிடம் கேட்கலாம்.

இப்பொழுது, சகோதரனே, அது அநேக சந்ததிகளினூடாக வந்தடைந்தவர்கள்.

88. இந்த சந்ததியிலிருந்து பன்னிரெண்டு பேர் வருவார்களானால், நான் ஆச்சரியமடைவேன். "வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது, அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.''

89. ஓ, நான் சபைகளை அறிவேன். அவைகள் என்ன கூறுகிற தென்றால், "நீங்கள் உங்களுடைய பெயரை புத்த கத்தில் பதிவு செய்துவிட்டால், நீங்கள் இதில் ஒரு அங்கத்தினராகி விடுகிறீர்கள். அப்பொழுது நீங்கள் சரியாகி விடுவீர்கள்'' என்கின்றன. அதைப் போன்று அப்படிப் பட்ட ஒரு வேத வாக்கியமே கிடையாது. தங்களுடைய பெயரை புத்தகத்திலும், சபையிலும் பதிவு செய்திருக்கின்ற ஒவ்வொருவரும் செல்வார்களானால்,

அங்கே கோடான கோடி பேர் இருப் பார்களே! எல்லாக் காரியமும் அங்கே உள்ளே செல்லுமே! அப்படியானால் அங்கே பரலோகத்தில் எல்லாவிதமான ஆவிகளும் இருக்குமே! அப்பொழுது பரலோகம் என்னவிதமான நிலையில் இருக்கும்? இப்பொழுது அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்.

90. யாராவது ஒருவர் என்னிடம், “இப்பொழுது சகோதரன் பிரான்ஹாம், ஒரு நிமிடம் பொறுங்கள். நான் இன்னார் - இன்னார், அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசுவதை கேட்டேன். எனவே அவர்கள் அதை சென்றடைவார்கள் என்று நான் அறிந்திருக்கிறேன்” என்று கூறலாம்.

91. அது அவர்கள் அதைச் சென்றடை வார்கள் என்பதையே பொருட்படுத்த வில்லை. பவுல் 1 கொரிந்தியர் 13ல், "நான்

மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷை களையும் பேசினாலும், அன்பு எனக்கிரா விட்டால் நான் ஒன்றுமில்லை” என்றான்.

92. "ஓ, நான் இன்னார்- இன்னா ருடைய கூட்டத்திற்குச் சென்றேன். ஓ, அவர் மகத்தான, வல்லமையான கிரியை களைச் செய்தார். அவர் குருடர்களை பார்வையடையச் செய்ததை நான் கண்டேன்."

93. அப்படி செய்திருந்தும் அவர் இழக்கப்பட்டவராய் இருக்கக் கூடும். "அந்நாளில் அநேகர் என்னிடத்தில் வந்து, 'கர்த்தாவே! நான் உம்முடைய நாமத்தில் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறேன் அல்ல வா? நான் உம்முடைய நாமத்தில் பிசாசு களை துரத்தியிருக்கிறேன் அல்லவா? நான் உம்முடைய நாமத்தில் அநேக மகத்தான கிரியைகளை செய்திருக்கிறேன் அல்ல

வா?' என்பார்களே. அப்பொழுது அவர், 'அக்கிரம செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள், நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை '' என்பார். "வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமா யிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்,''

94. நான் உங்களை அதிரச்செய்யும் - சில கணக்கெடுப்புகளை உங்களுக்குக் கொடுக்கட்டும். சிக்காகோ பட்டணத்தில் மருத்துவ விஞ்ஞானப்படி, வைத்தியர்க ளுடைய புள்ளி விவரப்படி, சிக்காகோ வில் மட்டும் முப்பதாயிரம் கருக்கலைப்பு காரியங்கள் செய்யப்பட்டுள்ளதாக மருத்து வர்கள் கூறியிருக்கின்றனர். எத்தனைபேர் இந்த சிறிய போதை மாத்திரைகளையும், மற்ற காரியங்களையும் எடுத்துக் கொண்டு கருக்கலைப்பு காரியங்களைச் செய்கின் றனர்?

95. பரிசுத்த விவாகத்தின் மூலம் பிறந்த குழந்தைகளைக் காட்டிலும் முறைதவறிப் பிறந்த பிள்ளைகளே அதிகமாய் ஐக்கிய நாடுகளில் உள்ளனர் என்பதை புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. உபாகமம் 14:2-ல் ஒரு வேசிப்பிள்ளை, அதற்கான கால முடிவாக நானூறு வருடங்களை எடுத்துக் கொள்ளும் என்று வேதம் கூறியுள்ளதை எத்தனைபேர் அறிந்துள் ளீர்கள்? அவர்களுடைய பிள்ளைக ளுடைய பிள்ளைகளுடைய, பிள்ளைக ளுடைய பிள்ளைகளுடைய பிள்ளைகளே கர்த்தருடைய சபையில் நிற்கலாகாது. நானூறு வருடங்கள், பத்து தலைமுறைகள். ஒரு தலைமுறை என்பது நாற்பது வருடங்கள். அவர்களுடைய பூட்டனா ருடைய, பூட்டனாருடைய, பூட்டனாரு டைய, பூட்டனாருடைய, பூட்டனாருடைய, பூட்டனாருடைய பூட்டனாருடைய பூட்ட

னார் ஒரு வேசிப்பிள்ளையாய் இருந்த தால், இவன் தொடர்பற்றவனாய் இருக்கி றானே! இப்பொழுது என்ன? அது எங்கு மாற்றப்பட்டது என்பதை எனக்குக் காட்டுங்கள்.

96. நாம் மீண்டும் தெளிநிலை பெற என்ன செய்ய வேண்டும்? இப்பொழுது வேசிப்பிள்ளைகளோ விபச்சாரத்தின் காரணமாகவும் ஆண்களைப் போலவே பாவமுள்ள ஸ்திரிகள் வீதியில் ஆடை யணிந்து செல்லுதல், சிகரெட்டு புகைப் பவர்கள், மதுபானம் அருந்துபவர்கள், கிறிஸ்தவர்கள் என்று உரிமை கோரி அழைத்துக் கொள்பவர்கள் தேவனுடைய பார்வையில் அருவருப்பாய் உள்ளனர். தேவனே அத்தகைய விபச்சாரிகளின் கூட்டத்தை தடை செய்வீராக. அது உண்மை. அப்படியிருந்தும் அவர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்

கொள்கிறார்களே? இயேசு, “வாசல் இடுக்க மாயும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" என்று கூறினதில் வியப்பொன்றுமில்லையே.

97. அவர்கள் தங்களைத் தாழ்த்தமாட் டார்கள். அவர்கள் விரைப்பானவர்களாய் இருக்கின்றனர். பாருங்கள், தாவீதுக்கு தான் செய்த தன்னுடைய பாவம் கூறப்பட்டபோது, அவன் உடனடியாக மனந்திரும்பினான். தேவன் அதற்காக அவனை நேசித்தார். ஆனால் நீங்கள் அவர்களிடத்தில் அவர்களுடைய பாவங் களை கூறினால், அவர்கள், "நான் ஒருபோதும் உங்களுடைய வீட்டிற்கு மீண்டும் வரவே மாட்டேன்" என்று கூறி விடுவார்கள். ஏன்? அவர்கள் செல்வதற்கு ஏராளமான ஸ்தலங்கள் உள்ளன. அவர் களால் அப்படிப்பட்ட காரியங்களுக்கு ஆதரவு கொடுக்கும் முறைகேடான

ஸ்தலங்களுக்குச் செல்ல முடிகிறது. ஆனால் இதுவோ பிரசங்கிமார்கள் முழுமையாக தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்து, எதனோடும் ஒப்புர வாகாமல், தேவனுடைய வார்த்தையை, சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டிய நேரமாய் உள்ளது. புருஷர்கள் தங்களை தாழ்த்த வேண்டும்.




என் சகோதரனே, நீ
நன்மையானதை செய்யும்
ஒவ்வொரு முறையும், அது உன்
பிள்ளைகளின் மேல் வருகிறது
என்பதை நீ உணர்ந்திருக்கிறாயா?
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: நாம் ஏன் ஒரு ஸ்தாபனம் அல்ல?, 58-09-27

54. இன்றைய வாலிப ஜனங்களே, கேளுங்கள். வாலிப பையன்களும் வாலிபப் பெண்களுமாகிய நீங்கள் இந்த சபைக்கு வருகிறீர்களோ அல்லது எங்கு செல்கின்றீர்களோ எனக்கு தெரியாது. நீங்கள் செய்து கொண்டிருக்கும் இந்த காரியங்களுக்காக, இன்னுமொரு சந்ததி இருக்குமானால், உங்கள் பிள்ளைகள் நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்பதை நீங்கள் உணருகிறீர்களா? உங்களுக்கு ஏன் மரியாதையோ ஒழுக்கமோ இல்லை? இங்கு குட்டை கால் சட்டைகளையும் மற்றவைகளையும் அணிந்துள்ள பெண் களே, அது உங்கள் மகளைப் பாதிக்கும். உங்கள் பாட்டி வெளியிலேயே வராத

பெண்ணாக இருந்தாள் (flapper) என்று உங்களுக்குத் தெரியுமா? உங்கள் தாய் கோரஸ் பெண்ணாக இருந்ததால் தான் நீங்கள் இன்று அரைநிர்வாணிகளாக இருக்கிறீர்களா? நிச்சயமாக உங்கள் பிள்ளைகள் என்னவாயிருப்பார்கள்? ஆம், ஐயா, தேவன் பெற்றோரின் அக்கிரமத்தை பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளின் பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக் கிறார் என்று கூறியுள்ளார்.

55. **என் சகோதரனே, நீ நன்மை யானதை செய்யும் ஒவ்வொரு முறையும், அது உன் பிள்ளைகளின் மேல் வருகிறது என்பதை நீ உணர்ந்திருக்கிறாயா?**

இங்கு பாருங்கள், நாம் எபிரெயர் 7-ம் அதிகாரத்தை எடுத்துக்கொள்வாம். ராஜாக் களை முறியடித்து வந்த ஆபிரகாமுக்கு

மெல்கிசேதேக்கு எதிர்கொண்டு போன போது, அவனை ஆசீர்வதித்தான். இப்பொழுது லேவி தசமபாகம் கொடுப்பதைக் குறித்து பவுல் இங்கு பேசுகிறான். அவன் "லேவி தன் சகோதரரிடத்தில் தசமபாகம் வாங்க கர்த்தரிடத்தில் கட்டளை பெற்றிருந்தான். தசமபாகம் வாங்குகிற லேவி தசமபாகம் கொடுத்தான்" என்றான். ஏனெனில் ஆபிரகாம் மெல்கிசேதேக்கை சந்தித்த போது, அவன் ஆபிரகாமின் அரையில் இருந்தான். ஆபிரகாம் அவனுக்கு முப்பாட்டன். ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்; ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான்; யாக்கோபு லேவியைப் பெற்றான். எனவே லேவி, தகப்பன், பாட்டன், முப்பாட்டன். லேவி ஆபிரகாமின் அரையிலிருந்தபோது, அவன் மெல்கிசேதேக்குக்கு தசமபாகம் செலுத்தினான் என்று வேதம் உரைக்கிறது. அல்லேலூயா!

உலகிலுள்ள எந்த ஒரு அசைவும் தேவனுடைய மகத்தான பல்சக்கரம் சுழலுவதை தடை செய்யுமென்று யாரும் உங்களிடம் கூற அனுமதிக்க வேண்டாம். அது இப்பொழுதும் சுழன்று போய்க் கொண்டேயிருக்கிறது. அது துவக்கத்தில் திட்டம் செய்யப்பட்டது. அவருடைய திட்டத்தில் தலையிட போதுமான பிசாசுகள் கிடையாது.

56. லேவி “மறைமுகமாக” தசமபாகம் செலுத்தினதாக வேதம் கூறவில்லை. அவன் முப்பாட்டனின் அரையிலிருந்த போது ''தசமபாகம் செலுத்தினான்“ என்று தான் அது உரைக்கிறது. மகிமை! அது என் கர்த்தர். ஓ, உலகம் உண்டாக்கப்படுவதற்கு முன்பே அவர் அதை அறிந்திருந்தார். அவர் எல்லாவற்றையும் அறிந்திருந்தார். அவன் ஆபிரகாமுக்குள் இருந்த போது தசமபாகம் செலுத்தினான்.

சகோதரியே, சகோதரனே, நீங்கள் எங்ஙனம் இவ்விதமாக ஓடித்திரிய முடிகிறது? ஜனங்கள் வேறு மனிதரின் மனைவிகளுடன் ஓடித் திரிவதும், மனைவி கள் குடும்பங்களைப் பிரித்து இந்த விதமாக வாழ்ந்து கொண்டிருக்கும் போது, அடுத்த தலைமுறை எவ்விதம் இருக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? இப்படித்தான் அது உள்ளது. அது ஒரு கூட்டம் முறை தவறிப் பிறந்த குழப்பத்தில் ஆழ்ந்த அழிவுக்கேதுவானவர்கள் கொண்டதாய் உள்ளதேயன்றி வேறல்ல. ஒன்று மாத் திரமே அதற்கு விடப்பட்டுள்ளது. அது தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அணுகுண்டு நாள். அது முற்றிலும் உண்மை. நாம் முடிவு காலத்தில் இருக்கி றோம்.

57. இன்று காலையில், தூரத்திலுள்ள கென்டக்கி மலைகளில் ஒரு சிறுவன்

உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அவனுக்கு பத்து அடி அருகில் கூட உங்களால் செல்ல முடியாது. அவன் சொர்க்கம் சர்க்கரை குழம்பு (Sorghum molasses) தயாரிப் பவன். அவன் வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் அறியாதவன். அவன் கேட்ட போது... அங்கு நான் கம்பங்கள் நடப்பட்டிருந்த இடத்தின் மேலேறினேன். நான் இருந்த இடம் எனக்குத் தெரியவில்லை. நான் அங்கு அணில் வேட்டைக்கு சென்று கொண் டிருந்தேன். நான் உட்கார்ந்த போது, அந்த பையனுடன் பேச ஆரம்பித்தேன். அவன் இராணுவத்தில் சேர வேண்டியவனாயிருந் தான். நாங்கள் பேசிக் கொண்டே இருந்து விட்டு, கர்த்தரைக் குறித்து பேச ஆரம்பித்தோம். அவன் "பிரசங்கியே, நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம் என்று

நீங்கள் விசுவாசிக்கிறீர்கள் அல்லவா?'' என்று கேட்டான்.

''நான் நிச்சயமாக, அப்படித்தான். நிச்சயமாக, மகனே நாம் முடிவுகாலத்தில் இருக்கிறோம்'' என்றேன்.

58. பார்த்தீர்களா? அந்த நேரத்தில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம், சகோதரனே, அந்த இடத்திற்கு நாம் வந்து விட்டோம். முன் காலத்திலிருந்த தாய் மார்களும் தந்தைமார்களும் பாட்டன்மார் களும் பாட்டிமார்களும் எப்படி வாழ்ந் தனர் என்று உங்களால் காண முடிய வில்லையா?தந்தைமார்களும் தாய்மார் களும் எப்படி வாழ்ந்தனர் என்று உங்க ளால் காண முடியவில்லையா? இன்று அழிவுக்கேதுவான நிலையில் இருக்கி றோம் என்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. தலைதெறிக்க பிரசங்கத்தாலும்

அவர்கள் குட்டை கால்சட்டை அணிந்து உங்கள் முகத்தில் துப்புவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அவர்கள் சிகரெட்டுகள் புகைத்து உங்கள் மேல் புகையை ஊதி, “உங்கள் வேலையைப் பாருங்கள்'' என்கின்றனர். ஏன்? ஏனெனில் அந்த இனத்திலிருந்து அவர்கள் வருகின்றனர். நான் நேரடியாக சர்ப்பத்தின் வித்து என்பதை எடுத்துக் கொள்ளபோகிறேன். அது எங்கே நகர்ந்து செல்கிறதென்றும், அவர்கள் ஏன் அவ்விதம் நடந்து கொள்கின்றனர் என்றும் நாம் காண்போம். அவர்கள் உலகத் தோற்ற முதற்கொண்டே பிசாசின் பிள்ளைகள். அது உண்மை.

நமக்கு வேறொன்றும் விடப்பட வில்லை. நியாத்தீர்ப்பு ஒன்று மாத்திரமே விடப்பட்டுள்ளது. நியாயத்தீர்ப்பைத் தவிர வேறொன்றும் இருக்கமுடியாது. தேவன் எல்லாவற்றையும் அடியோடு அழித்து

விடுவார். மனிதர்களே அதை தங்கள் மேல் வருவித்துக் கொண்டனர். அது அவ்வித மாக இருக்க வேண்டுமென்பது தேவ னுடைய எண்ணமல்ல. ஆனால் அது அவ்விதமாக இருக்குமென்று அவர் அறிந்திருந்தார். ஆகையால் தான், உலகத் தோற்ற முதல் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத அனைவரையும் அவன் மோசம் போக்கு வான் என்று அவர் உரைத்திருக்கிறார்.



ஆனால் என் மகனே, ஒரு காரியத்தை நீ நினைவுகூர வேண்டும். நீ மரிக்க வேண்டும். உனக்கு எவ்வளவுதான் படிப்பு இருந்தாலும், உன்னால் எவ்வளவுதான் பண்பாட்டைச் சேகரித்துக் கொள்ள முடிந்தாலும், நீ மரணத்தை சந்திக்க வேண்டும். ஏனெனில் “மனிதன் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் அவனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" என்று எழுதப்பட்டுள்ளது.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: உன் சுயபுத்தியின் மேல் சாயாதே, ஜனவரி 20, 1965

28. இப்பொழுது நாம் வேதாகமத்தை நீதிமொழிகளின் புத்தகம் முதலாம் அதிகாரம், இல்லை 2ம் அதிகாரத்துக்கு திருப்பி, முதலாம் வசனம் தொடங்கி வாசிப்போம். அது சாலொமோன் தன் மகன்களுக்கு "என் மகனே, என் வார்த் தைகளை ஏற்றுக் கொண்டால்..... என்பதன் தொடர்ச்சியாகும். என்னை மன்னிக்கவும்.

29. அது நீதிமொழிகள் 3 : 1. நான் வருந்துகிறேன். என் குறிப்பு புத்தகத்தை நான் நோக்கினபோது, அது நீதிமொழிகள் 3ம் அதிகாரம், முதலாம், இரண்டாம் அதிகாரம் அல்ல. நான் வருந்துகிறேன். நீதிமொழிகள் 3 : 1.

என் மகனே, என் போதகத்தை மறவாதே, உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக்கடவது.

அவைகள் உனக்கு நீடித்த நாட்களையும், தீர்க்காயுசையும், சமாதானத்தையும் பெருகப் பண்ணும்.

கிருபையும் சத்தியமும் உன்னை விட்டு விலகாதிருப்பதாக, நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள்.

அதினால் தேவனுடைய பார்வையிலும் மனுஷருடைய பார்வையிலும் தயையும் நற்புத்தியும் பெறுவாய்.

உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கை யாயிருந்து..

**உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள், அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.**

30. ஓ, அது மிகவும் அழகான வேதவாக்கியம் என்று எண்ணுகிறேன். இப்பொழுது நம் வசனத்திலிருந்து, "உன் சுயபுத்தியின் மேல் சாயாதே' என்னும் பொருளைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

31. நாம் வாழும் இக்காலத்துக்கு இது விசித்தரமான ஒரு பொருளாகும். ஏனெனில் இன்று கல்விக்கும் நம் சுயபுத்தியினால் நாம் காரியங்களை அறிந்து கொள்ளும் விதத்துக்கும் அதிக முக்கியத்துவம் செலுத்தப்படுகிறதென்பது உறுதி. இது கல்வி கற்கும் காலமாயுள்ளது. ஆனால் இங்கு விசித்திரமான இந்த ஆலோசனையைக் காண்கிறோம். மற்ற வேதவாக்கியங்

களைப் போலவே, இதற்கும் இதற்குரிய இடம் உள்ளது. அந்த இடம் எங்குள்ளது என்பதை தேவன் நம்மைக் காணச் செய் வார் என்று நம்புகிறோம்.

32. இன்றைக்கு கல்வி கற்க நமது பிள்ளைகளை நாம் பள்ளிகளுக்கு அனுப்பு கிறோம். அவர்கள் முதல் நிலைப்பள்ளி படித்து முடித்தவுடனே, அதிக அறிவு பெறுவதற்கென அவர்களை உயர்நிலைப் பள்ளிக்கு அனுப்புகிறோம். சில பிள்ளை கள் அதிர்ஷ்டவசமாக கல்லூரி படிப்பும் படித்து இன்னும் அதிக அறிவைப் பெறுகின்றனர். அதன் மூலம் அவர்கள் பெறுவது என்னவெனில்... அநேக சமயங் களில், வேலை கிடைப்பதற்கென, நீங்கள் குறைந்தது உயர்நிலைப் பள்ளி அறிவை அல்லது கல்லூரி படிப்பை உடையவர் களாயிருக்க வேண்டும்.

33. இருப்பினும், சாலொமோன் ஞானி நமது சுயபுத்தியின் மேல், நாம் படித்தவைகளின் மேல் சாயக் கூடாது என்று நமக்கு அறிவுரை கூறுகிறான். அவன் ஏன் அவ்வாறு கூறுகிறான் என்று நாம் வியக்கிறோம். ஏனெனில் நமது நவீன ஞானம் வழக்கமாக மனித ஞானமாயிருந்து, தேவனுடைய வார்த்தைக்கு முரணாயுள்ளது. அதை தான் அவன் தன் மகன்களுக்கு புத்திமதியாக கூற முயன்றானேயன்றி, அவர்கள் படிப்பறியாதவர்களாயிருக்க வேண்டும் என்பதனால் அல்ல என்று எண்ணுகிறேன். அவர்கள் தங்கள் சுயபுத்தியின் மேல் சாயக்கூடாது என்று அறிவுரை கூறினான்.'

34. நம்முடைய குமாரருக்கும் தேவனுடைய குமாரருக்கும் நாம், கல்வி கற்பதனால் பரவாயில்லை என்றும், அதற்கு விரோதமாக ஒன்றுமில்லை என்றும்.

ஆனால் கல்வி தேவனுடைய வார்த்தைக்கு முரணாக இருக்குமானால், அப்பொழுது வார்த்தையின் மேல் சாய்ந்து கல்வியை விட்டுவிட வேண்டுமென்றும் அறிவுரை கூறுவது நலமென்று. எண்ணுகிறேன். கல்வி ஒருக்கால் உங்களுக்கு : நல்ல ஒரு வேலையை அளித்து, நுண்ணறிவு படைத்த மக்களினிடையே ஒரு ஸ்தா னத்தை அளிக்கும். அது நல்லது தான். அது ஒருக்கால் உங்கள் பொருளாதார நிலை யிலும், வாழ்க்கையிலும் பேருதவியா யிருந்து, உங்கள் வாழ்வின் தரத்தை சிறிது மேம்படுத்தக்கூடும்.

35. **ஆனால் என் மகனே, ஒரு காரியத்தை நீ நினைவுகூர வேண்டும். நீ மரிக்க வேண்டும். உனக்கு எவ்வளவுதான் படிப்பு இருந்தாலும், உன்னால் எவ்வளவுதான் பண்பாட்டைச் சேகரித்துக் கொள்ள முடிந்தாலும், நீ மரணத்தை சந்திக்க வேண்டும். ஏனெனில் "மனிதன்**

**மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் அவனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" என்று எழுதப்பட்டுள்ளது.** தேவன் அப்பொழுது...

மரணம் அவ்வளவு மோசமானதல்ல, ஆனால் நியாயத்தீர்ப்பு அடைவது மோசமான பாகம். நீங்கள் மரித்துவிடலாம், ஆனால் பின்பு நியாயத்தீர்ப்பு அடைய வேண்டும்.

**நீ உலகிலிருந்த போது எவ்வளவு படித்தாய், எவ்வளவு அறிவை சேகரித்துக் கொண்டாய், நீ பட்டம் பெற்றுக் கொண்டாயா, போதகராகப் பட்டம் பெற்றுக் கொண்டாயா என்றெல்லாம் தேவன் உன்னிடம் கேட்கப் போவதில்லை. அவையெல்லாம் உனக்கு அவசியமென்று கருதப்படமாட்டாது.**

36. **ஆனால் தேவனுடைய வார்த்தையை அறிந்து கொள்ள நீ என்ன செய்தாய் என்று உன்னிடம் கேட்கப்படும். அது தான் அவசியம்.** உன் கல்வி நல்லது தான், ஆனால் தேவனுடைய வார்த்தையோ ஜீவனாயுள்ளது. "என் வார்த்தை ஜீவனாயுள்ளது' என்றார் அவர். அதை அறிவதே ஜீவன். அவர், "அவரை அறிந்து கொள்ளுங்கள்" என்றார். அவர் வார்த்தையாயிருக்கிறார். அவர் வார்த்தையாயிருப்பதனால் அவரை வார்த்தையின் மூலமே நீங்கள் அறிந்து கொள்ள முடியும். அந்த ஒரு வழியில் மாத்திரமே நீங்கள் அவரை அறிந்து கொள்ள முடியும்.

37. சிலர் வந்து உங்களிடம், "இதுதான் தேவன்', "அதுதான் தேவன்", "இது சரி", "அது சரி" என்று சொல்லக்கூடும். ஆனால் நாமோ வார்த்தைக்கு வரவேண்டும், அதுவே சத்தியம்.

38. வார்த்தை வடக்கு நட்சத்திரத்தைப் போன்றது, அது உண்மையான நட்சத்திரம். உலகம் எப்பக்கம் மிதந்து சென்றாலும், வடக்கு நட்சத்திரம் பூமிக்கு மையமாக உள்ளது. உங்கள் திசைக்காட்டும் கருவியை நீங்கள் வடக்கு நட்சத்திரத்துக்கு பொருத்துகிறீர்கள். ஏனெனில் அது எப்பொழுதுமே பூமிக்கு மையமாக உள்ளது. மற்ற நட்சத்திரங்கள் வேறு திசைகளில் சென்ற போதிலும், வடக்கு நட்சத்திரம் நிலையாக உள்ளது.

39. பரிசுத்த ஆவி தான் திசைகாட்டும் கருவி. உங்கள் திசை வடக்கு நட்சத்திரம். பரிசுத்த ஆவி எப்பொழுதுமே வார்த் தையை சுட்டிக் காட்டும். அது உங்களை தேவனுடைய வார்த்தைக்குத் தவிர வேறெதற்கும் வழி நடத்தாது. அப்படி யிருக்க ஒரு மனிதன் வார்த்தைக்கு முரணாயுள்ள கோட்பாடுகளை ஏற்றுக்

கொண்டு, தனக்கு பரிசுத்த ஆவி உள்ளதாக எப்படி கூற முடியும்? பரிசுத்த ஆவி உங்களை கோட்பாட்டுக்கு அப்பால் சுட்டிக் காண்பிக்கும். உங்களை வார்த் தைக்கு சுட்டிக் காண்பிக்க பரிசுத்த ஆவி அவசியமாயுள்ளது. ஏனெனில் அவர் வார்த்தையாயிருக்கிறார். அது அங்கு மாத்திரமே... திசை காட்டும் கருவியிலுள்ள காந்த ஊசி வட துருவத்தை மாத்திரம் சுட்டிக் காண்பிக்க பொருத்தப்பட்டுள்ளது, அந்த ஒரு திசைக்கு மாத்திரமே அது இழுக்கப்படும். வார்த்தையின் ஆக்கியோ னும், அதை எழுதினவரும், அதை உயிர்ப்பிக்கிற வருமான பரிசுத்த ஆவி ஒரு நபரை வார்த்தைக்குத் தவிர வேறெ தற்காவது எப்படி சுட்டிக் காண்பிக்க முடியும்?

40. எனவே ஒரு நபர் பரிசுத்த ஆவியைப் பெற்றுள்ளதாக கூறிக்கொண்டு,

வார்த்தைக்கு முரணாயுள்ள ஒன்றை ஏற்றுக் கொள்வானானால், அவன் பெற்றுள்ளது உண்மையான பரிசுத்த ஆவி அல்ல என்பதை அது காண்பிக்கிறது. பாருங்கள்? அது ஆவியாயிருக்கக் கூடும். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் அது கிறிஸ்துவின் பரிசுத்த ஆவி அல்ல. உங்களுக்குத் தெரியுமா, அநேக சமயங்களில், மனிதர் கொண்ட குழுவில், அவர்கள் ஒருவரின் ஆவியை மற்றவர் பெற்றுக் கொள்கின்றனர். அது ஒரு குறிப்பிட்ட காரியத்தை சுட்டிக் காண்பிக்கலாம், ஆனால் கிறிஸ்துவை அது சுட்டிக் காண்பிப்பதில்லை. ஆனால் பரிசுத்த ஆவி எப்பொழுதுமே கிறிஸ்துவை சுட்டிக் காண்பிக்கிறார். கிறிஸ்துவே வார்த்தை.

# நமக்கு முறையிட ஒன்றுமேயில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: தானியேலுக்கு காபிரியேல் அறிவுறுத்தியவைகள்

2. இப்பொழுது உஷ்ணமாயிருக்கிறது. நமக்கு இயன்ற அளவுக்கு மேல் நாம் இங்கே இருக்க உத்தேசிக்கவில்லை இப்பருவ காலமானது வழக்கமாக செயல் - நிகழ்ச்சி முதலிய வற்றுக்கு ஏற்றதல்லாத மோசமான பருவகாலமாக இருப்ப தால், மக்கள் அடிக்கடி சபை ஆராதனைகள் ஏற்படுத்திக் கொள்ளு கிறதில்லை. மேலும், விசேஷமாக... அவர்கள் யாவரும் குளிர் சாதன வசதி செய்யப்பட்ட அறைகளைப் பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை யில் அங்கே சௌகரியமாகவே இருக்கும். அவ்வசதியை நாமும் பெற்றிருக்க விரும்பு கிறோம்; ஆனால் இந்த வேளையில் நமக்கு அவ்வசதி இல்லை.

3. நமது முற்பிதாக்களில் அநேகர் தகிக்கிற சூரியனின் கீழ் வாழ்ந்திருக்கின்றனர். நமக்கு குளிர்சாதன வசதி செய்யப்பட்ட அறை இல்லாததைப்பற்றி நான் எண்ணும் போது, எனது நினைவுகள் எப்பொழுதும் ஆப்பிரிக்க தேசத்திற்கு பின்னிட்டு செல்கிறது. அங்கே மக்கள் சூறாவளிகளிலும் திறந்த வெளிகளில் படுத்துக்கொண்டிருக்கவும், அவர்களுடைய பெண்கள் தங்கள் தலை முடியை தங்கள் முகங்களில் தொங்கவிட்டவாறு, இரவும் பகலும் அங்கேயே கிடந்து அவர்கள் கிடக்கிற இடங்களைவிட்டு ஒருபோதும் அகலாமல், புசியாமலும், குடியாமலும், ஒன்றும் செய்யாமல் அவ்வப்பொழுது கிடைக்கிற கர்த்தருடைய ஒன்றிரண்டு வார்த்தைகளை பிடித்துக் கொள்ளும்படி காத்து கிடப்பார்கள்.

4. மிகவும் வெப்பமாயிருந்த ஒரு சமயத்தில் நான் மெக்ஸிகோவுக்கு சென் றிருந்ததை நான் எண்ணிப்பார்க்க முடி கிறது. குளிர்சாதன வசதி செய்யப்பட்ட ஒரு அறையில் நான் உட்கார்ந்திருக் கையில், மிக மிக உஷ்ணமாயிருந்த படியால் எனக்கு நானே விசிறிக் கொள்ள வேண்டிய அளவுக்கு இருந்தது என்று நான் நேர்மையாக கூறுகிறேன். அங்கேயிருந்த ஒரு பெரிய அரங்கத்தின் மணற்பரப்பில் மக்கள் காலையில் ஒன்பது மணி துவங் கியே வந்து விட்டதை நான் கண்டேன். அங்கே அமருவதற்கு இருக்கைகள் கூட இல்லை. வியாதியஸ்தர்கள், கடுமையாக சுகவீனமுற்றவர்கள், மரித்துக்கொண்டிருக் கிற பிணியாளிகள், மரித்துகொண்டிருந்த சிறு குழந்தைகள் ஆகிய யாவரும் அந்த கொதிக்கிற சூரியனின் கீழ் நின்று கொண்டிருந்தனர். அவர்களுக்கு வெயி

லுக்கு ஒதுங்க எந்த நிழலும் அங்கே இல்லை. ஒருவர் மேல் ஒருவர் சாய்ந்து கொண்டு, காலை ஒன்பது மணி முதல் இரவு ஒன்பது மணி வரையிலும் நின்றிருந்து, முப்பது நிமிட பிரசங்கத்தை மொழி பெயர்ப்பாளர் மூலம் கேட்பதற் காகவும், கர்த்தருடைய கிரியைகளைக் காணவுமாக அங்கே காத்து கிடந்தனர். அவர்கள் தங்கள் மேல் பெரிதும், பழசானதுமான கனமான ஆடைகளை அணிந்தவர்களாய் அமர்ந்து காத்துக் கிடந்தனர். அவர்கள் அவ்விதமான ஆடை களை குளிர்காலத்திலும், கோடையிலும் அணிகிறார்கள். அவர்களுக்கிருந்த ஆடை கள் அவ்வளவுதான்.

5. காடுகளிலிருந்தும் பிணியாளிகளை அவர்கள் ஏராளமாகக் கொண்டு வருகிற விதத்தை நான் நினைத்துப் பார்க்கிறேன். அங்கே நாம் நகர்ந்து செல்லக் கூட

இயலாதபடி அவர்கள் கூடியிருப்பார்கள். இந்தியாவில் குஷ்டம் மற்றும் இதர வியாதிகளோடும் கூடிய மக்களை ஒருவர் மேல் ஒருவர் கிடத்தப்பட்ட நிலையில் கொண்டு வந்து வைத்திருப்பார்கள். தெருக்களில் அவர்களை இழுத்துக் கொண்டு வருவார்கள். வெப்பமண்டலத்தில் தகிக்கிற, கொதிக்கிற, எரிகிற சூரியனின் கீழோ அல்லது புயல்காற்று, மின்னல் மின்னிக் கொண்டிருக்கும்போதோ கூட அவர்கள் அசையாமல் முறையிடாமல் அவ்வப்பொழுது வருகிற தேவனுடைய வார்த்தையை தங்களுடைய ஆத்துமாவுக்காக பிடித்துக்கொள்ளும்படி அவர்கள் காத்துக்கிடந்தனர். அப்படியெல்லாம் இருக்கையில் நமக்கோ நம் தலைகளுக்கு மேலாக மின் விசிறிகள் சுழன்று கொண்டிருக்க, நமக்கு மேலே நல்ல கூரை இருக்க, நாம் ஏன் எதற்காக மன்னிப்புக்

கேட்டுக் கொள்ளவேண்டும்? நாம் இதைப் பற்றி முறையிடுவோமென்றால், நாம் நம்மைக் குறித்து வெட்கமடைய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

6. தெற்கு பசிபிக் மாகடல் பிரதேசத்தில் உள்ள ஒரு தீவில் சமீபத்தில் நடந்ததை நான் நினைத்துப் பார்க்கிறேன். அன்றொரு நாள் இரவில் நான் ஒரு ஆராதனையை நடத்தினேன். அன்று ஒரு புயல் வந்தது. அவ்விதமானதொரு புயலை நான் கண்டதேயில்லை. எங்கும் மின்னலானது பளிர் பளீரென மாறி மாறி அடித்துக் கொண்டே இருந்தது. காற்று அடித்து மரங்களை கீழே சாய்த்தது. அப்பொழுது, நான், “நல்லது, மக்கள் எவரும் அங்கே வந்திருக்கமாட்டார்கள், எனது உடுப்பை நான் கழற்றி விடுகிறேன்...'' என்று எண்ணினேன்.

7. சிறிது நேரம் கழித்து, கதவுக்குப் பின்னால் ஒரு சிறிய கார் வந்து நின்றது; யாரோ கதவைத் தட்டி, ''போக ஆயத்த மாயிருக்கிறீர்களா?' என்று கேட்டார்.

அங்கே வந்த ஆங்கிலம் தெரிந்த அந்தப் பையனிடம் நான், ''அங்கே மக்கள் வந்திருக்கிறார்களா?" என்றேன்.

''அந்த பெரிய விளையாட்டரங்கத்தில் கூட்டம் நடக்கிற இடத்துக்குப் போகிற வழியில் உள்ள நகர் சதுக்கத்தண்டையில் கூட நெருங்க முடியாதபடி நிலைமை உள்ளது'' என்று அவன் பதிலளித்தான்.

''அந்த அளவுக்கு மக்கள் வெள்ளம் அங்கே இருக்கிறது என்று நீ கூறுகிறாயா, இத்தனை புயலிலும் கூட'' என்று நான் வினவினேன்.

''அவர்கள் தேவனை குறித்து கேட்க விரும்புகின்றனர்'' என்று பதிலளித்தான்.

8. எனவே நான் அங்கே சென்றேன். அங்கே ஸ்திரீகள், வாலிபப் பெண்கள், வாலிபர்கள் கூடியிருந்தனர். அவர்கள் கேலி பரிகாசமாக நகைத்துக்கொண்டிருக்காமலும், மெல்லும் பசையை (Chewing gum) மென்று கொண்டிருக்காமலும், தங்களுடைய சிநேக பையன்களைப் பற்றி கதையடித்துக் கொண்டிருக்காமலும், ஒவ்வொரு வார்த்தையையும் அப்படியே அமைதியாக நின்று கவனித்துக் கொண்டே யிருந்தனர். பீட அழைப்பைக் கொடுத்த பொழுது, ஆயிரக்கணக்கானவர்கள் கண்ணீர் மல்க எழுந்து நின்று தேவனுக்கு நேராக தங்கள் கரங்களை உயர்த்தியவாறு தங்களுடைய ஆத்துமாக்களுக்கு இரக்கம் வேண்டிக் கேட்டவாறு இருந்தனர். அவர்களில், பதினேழு, பதினெட்டு வயது

மதிக்கத்தக்க இளம் பெண்களும், வாலிபர் களும் இருந்தனர். இங்கே வயதானவர் களைக் கூட வார்த்தையை கேட்க வைப்பதென்றால் மிகவும் கடினமா யுள்ளது. நீங்கள் இவ்வித நிலையை கண்டீர்களா? நமக்கு முறையிட ஒன்றுமே யில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. தேவனுக்கு நன்றியுண்டாவதாக. ஆம், ஐயா!

9. அமெரிக்காவில் ஏனைய இடங் களில் உள்ளதைப் போல நாமும் நவீன மயமாக யாவும் நமக்கு இருக்க வேண்டு மென்று விரும்புகிறோம். ஆனால் நமக்கு அந்த விதமாக இருக்கவில்லை. எனவே நமக்கு இருப்பதைக் கொண்டு நடத்திச் செல்லுவோம்.

# கழுகின் சத்தம்

## நவம்பர் 28, 2023

